NEWS RELEASE

UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

# தன்னிச்சையான தடுத்துவைப்புக்களை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு இலங்கை உடனடியாக மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்த வேண்டும்

கொழும்பு / ஜெனீவா( 15 டிசம்பர் 2017)- நாடு பூராவும் தன்னிச்சையான தடுத்துவைத்தல்கள் காரணமாக, இலங்கையில் தனிப்பட்ட சுதந்திரத்தை அனுபவிப்பது மீது,குறிப்பிடத்தக்க சவால்களை 'தன்னிச்சையான தடுத்து வைத்தல்கள்' தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைக் குழு, அடையாளம் கண்டுள்ளது.

ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான பொறிமுறைகளுடன் செயற்படுவது பற்றியும், சித்திரவதைக்கு எதிரான சமவாயத்தின் விருப்பத்திற்குரிய ஆரம்ப வரைபிற்கு அண்மைக் காலத்தில் இணக்கப்பாட்டைத் தெரிவித்தமை குறித்தும் சாதகமான முன்னெடுப்புக்களை இந்நிபுணர்கள் குழு அங்கீகரிக்கின்றது.

எனினும்,சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் கீழ் இலங்கையின் கடப்பாடுகளைச் செயற்படுத்துவது மற்றும் அரசாங்கத்தின் 2017-2021 தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் உடனடி நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

''சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர், பாதுகாப்புப் படையினர், நீதித்துறையினர் மற்றும் ஏனைய அதிகார சபைகள் தனிநபர் சுதந்திரத்திற்கான உரிமைகளுக்கு இன்னும் மதிப்பளிக்கவில்லை'' என மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழு இலங்கையில் மேற்கொண்ட உத்தியோகப்பூர்வ விஜயத்தின் இறுதியில் வெளியிட்ட பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

தனிநபர்களின் சுதந்திரத்தை இழக்கச்செய்யும் தற்போதைய அதிகாரங்கள் பரந்துபட்ட நிறுவனங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் குறிப்பிட்டுளளனர்.பொலிஸ் நிலையங்கள், சிறைச்சாலைகள், திறந்த வேலை முகாம்கள், இளம்வயதினருக்கான இல்லங்கள் மற்றும் முதியோருக்கான இல்லங்கள், மனநல சுகாதார நிலையங்கள், முன்னைநாள் போராளிகளுக்கும் - போதை வஸ்துக்களுக்கு அடிமையானோருக்கும்,

நலிவுறும் சூழ்நிலைகளில் வாழ்வோரக்கும் உரிய  புனர்வாழ்வு நிலையங்கள் இவற்றுள் உள்ளடங்கும்.

மிக அதிகமாக விளக்கமறியல் சிறைகளைப் பயன்படுத்துதல், தடுத்து வைப்பதற்கான செயல் திறன் குறைந்த மாற்று வழிமுறைகள், காலம் கடந்த சட்ட நடைமுறைகள், அனேகமான சந்தர்ப்பங்களில் சித்திரவதைகள் அல்லது வலுக்கட்டாயமாகப் பெறும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களில் தங்கியிருத்தல், என்பன உடனடியாகக் கவனம் செலுத்தி மறுசீரமைப்புக்களுடன்  அணுக வேண்டிய சில முக்கிய பிரச்சினைகளாகும்.

சந்தேக நபர்கள் நியாயமற்ற முறையில் கால வரையரை இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கையில், நீதிமன்ற நடவடிக்கைகள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களின் குற்றமற்ற தன்மை பற்றிய ஊகிப்பு மற்றும் குறித்துரைக்கப்பட்ட செயல் முறைக்கான உரிமைகள் இன்னும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படாமை பற்றியும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அவசரகால நிலைமையின்போது இயற்றப்பட்ட விசேட சட்டங்களும் அதிகாரங்களும் நீக்கப்பட வேண்டும். குறிப்பாக, 1979இன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டுமென ஐ.நா.நடவடிக்கைக் குழு இலங்கை அரசாங்கத்தை வேண்டிக் கொள்கின்றது.இச்சட்டம் நான்கு தசாப்தங்களாக தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கு முக்கிய காரணியாக அமைந்தள்ளது.இது தொடர்பான புதிய சட்டவாக்கம் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கும் சிறந்த நடைமுறைகளுக்கும் ஏற்புடையதாக அமைய வேண்டும்.

தடுத்துவைப்பட்டோர், குறிப்பாக கைது செய்யப்படும் தருணத்திலிருந்து, அவர்களின் தொடக்க வாக்கு மூலத்தை பதிவு செய்வதற்கு  முன்னர், சட்ட உதவி பெறுவதற்க உடனடியாக அணுகக் கூடிய வகையில்,உரிய நடவடிக்கைளின் ஒரு சில அடிப்படை உறுதிப்பாடுகளை அனுபவிக்க முடிவதில்லை. ‘‘குறிப்பாக பொலிஸ் நிலையங்களில் சட்டத்தரணியின் பிரசன்னம் இன்றி தடுத்து வைக்கப்பட்டோரை அதிகாரிகள் விசாரணை செய்யும் விடயம் பற்றிக் கவலைப்படுவதாக நிபுணர்குழு எடுத்துரைத்தது.

பிள்ளைகள், பெண்கள், முதியோர்கள், சமூக உளவியல் குறைபாடுகளுடையோர் மற்றும் வறுமையினால் பாதிக்கப்பட்டோர் போன்ற இலகுவில் பாதிப்படையக் கூடிய விளிம்புநிலையினர் பற்றி  நிபுணர் குழு கவனம் செலுத்தியுள்ளது.

“இது தொடர்பாக நிலவும் சாதகமான நடைமுறைகளை அடையாளம் காணும் அதேவேளை, தனிநபர்களின் சுதந்திரத்தை இழக்கச்செய்வது பற்றிய சட்ட அடிப்படைகளும், நடைமுறைகளும் தெளிவாக அமையாமை பற்றி கவனிக்கப்பட வேண்டுமென்று இன்நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இத்தகைய பின்னணியின் கீழ், தன்னிச்சையான நிலைமைகளுக்க எதிராக வெற்றிகரமான பாதுகாப்பு இல்லாத அதே சமயம், சுயாதீனமான கண்காணிப்பு மற்றும் நிர்வாகப் பொறிமுறைகளை வலுப்படுத்தும் அவசரத் தேவை நிலவுகின்றது.”

2017 டிசம்பர் மாதம் 4-15 ஆகிய நாட்களில் மேட்கொண்ட இவ்விஜயத்தின்போது, அரச உத்தியோகத்தர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள், சிவில் சமூக அமைப்பக்கள், மற்றும் ஏனைய தரப்பினரை நிபுணர் குழுவின் பரதிநிதிகள் சந்தித்தனர். அதே சமயம் கொழும்பு, நீர்கொழும்பு, அநுராதபுரம், வவுனியா, திருகோணமலை, பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களுக்கும் சிபுணர் குழுவினர் விஜயம் செய்தனர். இதன்போது, ஆட்கள் தடுத்து வைக்கப்படடிருக்கும் 30 மேற்பட்ட அமைவிடங்களுக்கும் விஜயம் செய்து, சுதந்திரம் இழக்கச் செய்யப்பட்டுள்ள நூற்றுக்கும் (100) மேற்பட்டோரை பேட்டி கண்டது.இத்தூதுக் குழுவில் ஹோஸே அன்ரோனியோ குவேரா பர்மூடாஸ், லீ டொமே, எலினா ஸ்ட்டீனர்ட், என்போர் பங்கேற்றனர்.இதன்போது, மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் உதவி வழங்கினர்.

இவ்விஜயம் தொடர்பான இறுதி அறிக்கை 2018 செப்தம்பரில் மனித உரிமைகளுக்கான பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

## முடிவுரை

‘**தன்னிச்சையான** தடுத்து வைத்தல்கள்’ தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைக் குழு உலகின் ஐந்து (5)வலயங்களில் இருந்து,சுயாதீனமான பின்வரும் ஐந்து நிபுணர்களை உள்ளடக்கியுள்ளது. **திரு.** ஹோஸே **அன்ரோனியோ**(மெக்ஸிக்கோ) தற்போதைய பிரதம அறிக்கையாளர், **திருமதி. ஏலினா ஸ்ட்டீனர்**ட்(லெட்வியா), **திருமதி.லீ டொமே**(அவுஸ்திரேலியா) , **திரு. சிஹொங் பில் ஹொங்** (கொரியக் குடியரசு), **திரு. சிட்டொன்ஜி ரோலண்ட் அட்ஜோவீ**(பேனின்)

நடவடிக்கைக் குழுக்கள், மனித உரிமைகளுக்கான *விசேட நடைமுறையாக* மனித உரிமைகளுக்கான பேரவையினால் அறிமுகப்படுத்தப்படும் நடைமுறையின் ஓர் பிரிவாகும். *விசேட நடைமுறைகள்,* ஐக்கிய நாடுகளின்

மனித உரிமைகள் தொகுதியின், சுயாதீன நிபுணர்களின் பாரிய குழுமமாகும், பேரவையில் சுயாதீனமாக விடயங்களைக் கண்டறியும் கண்காணிக்கும் பொறிமுறைகளின் பொதுப் பெயராகும். விசேட நடைமுறைகளுக்கான பணிப்பாணைபெற்ற அதிகாரிகள் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் நிலைமைகள் அல்லது உலகின் அனைத்து தொனிப்பொருள்களின் கீழான பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கு, மனித உரிமைகள் பேரவையினால் நியமிக்கப்படும் சுயாதீன மனித உரிமைகள் நிபுணர்களாவர். அவர்கள் ஐக்கிய நாடுகளின் பணியாளர் குழுவில் உள்ளடக்கப்படமாட்டார்கள். ஏதேனும் அரசாங்கம் மற்றும் அமைப்புக்கள் என்பவற்றிலிருந்து அவர்கள் சுயாதீனமானவர்களாக இருந்து வருவதுடன் தனிப்பட்ட பொறுப்பில் செயற்பட்டு வருகின்றார்கள். தமது நடவடிக்கைகளுக்கென சம்பளம் பெறுவதில்லை.

மேலதிக விபரங்களுக்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பற்றிய Sri Lanka பக்கத்தைப் பார்க்கவும்,

ஊடகக் கோரிக்கைகளுக்க தயவு செய்து தொடர்பு கொள்க.

***கொழும்பில்***

ஐ நா ஊடகப்பிரிவு *(+94 (0) 774448401 / info.lk@one.un.org)*

**ஜெனீவாவில் விஜயத்துக்கு (முன்னரும் பின்னரும்)** *Lucie Viersma (+41 22 928 9380 / lviersma@ohchr.org)*
*Francisco Alfonzo (+41 22 917 9822 / falfonzo@ohchr.org)*
*or write to wgad@ohchr.org*

ஐ நாவின் ஏனைய சுயாதீனமான நிபுணர்கள் தொடர்பான ஊடக விசாரணைகள்: *Jeremy Laurence* – ஊடகப்பிரிவு *(+ 41 22 917 9383 / jlaurence@ohchr.org)*

Concerned about the world we live in? Then STAND UP for someone’s rights today. #Standup4humanrights and visit the web page at http://www.standup4humanrights.org